**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF : Judicial Magistrate, Thuraiyur.
Case No. : CC. 145 of 2021
Prosecution Witness : PW1

12.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : சாரதி | Calling | : கூலிவேலை |
| spouse Name | : செந்தில்குமார் | Age | : 35 |
| Village | : அம்மாப்பட்டி | | |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மாப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி மற்றும் அவரது கணவரை தெரியும். எங்களுக்கும், எதிரிகளுக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. கடந்த 06.02.2020 ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் ஆஜர் எதிரி மற்றும் அவரது கணவர் வீட்டிற்கு வந்து ஏ தேவுடியா, புண்டா மவளே நீ என்ன ஆளுபுண்டயா என்று எதிரிகள் இருவரும் என்னையும், எனது மாமியாரையும் திட்டினார்கள். எனது கணவர் டிரைவர் அவர் வீட்டில் இல்லாததால் அவர் வந்ததும் பேசி கொள்ளலாம் என்று கூறியபோது சுகாஷினி என்னையும், எனது மாமியாரையும் திட்டினார். மனோகரன் அவகிட்ட என்ன பேச்சு என்று என்னை கன்னத்திலும், உடம்பிலும் கையால் அடித்தார். சம்பவத்தை எனது மாமியார் தடுத்தார். வீட்டில் இருந்த பொருட்கள் சொம்பு, சில்வர் பாத்திரங்களை அடித்து உடைத்தார். அதை நான் தடுத்தபோது என்னை மனோகரன் முடியை பிடித்து இழுத்து டிச்சியில் தள்ளி மிதித்தார். அருகில் உள்ளவர்கள் வரவும் எதிரிகள் சென்றுவிட்டனர். மயக்கமடைந்த என்னை தண்ணீர் தெளித்தனர். எனக்கு மயக்கம் தெளிந்த பின்பு ஆஜர் எதிரி மற்றும் அவரது கணவரும் எனது வீட்டின் ஓட்டை

உடைத்தார்கள். மீண்டும் பிரச்சினை செய்தார்கள். நான் ஆம்புலன்ஸ் மூலம் துறையூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் சில்வர் பொருட்கள் என்னுடைய வீட்டில் எதிரிகள் சேதப்படுத்திய பொருட்களாகும். **மேற்படி சில்வர் பாத்திரங்கள் (4 எண்ணிக்கை) அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் மண்பறையில் 6 வருடமாக குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எனது மாமியார் வீட்டில் உள்ளார். எனது மாமனார் ராணுவத்தில் பணிபுரிந்தார். எனது திருமணத்திற்கு முன்பு எனது மாமனார் உயிருடன் இருந்தார். எனது திருமணம் முடிந்து 2015 ம் வருடம் எனது மாமனார் இறந்தார். 5 வருடமாக எனது மாமியார் மண்பறையில் என்னுடன் இருந்தார். தற்போது ஒரு வருடமாக அம்மாப்பட்டியில் வசித்து வருகிறார். சம்பவதன்று எனது மாமியார் போன் செய்து என்னை அம்மாப்பட்டிக்கு வரசொல்லி நான் மண்பறையில் இருந்து சம்பவ இடம் சென்றேன் என்றால் சரியல்ல. சம்பவதன்று எனது கணவர் ஊரில் இல்லை. 1வது எதிரி லாரி டிரைவர். எங்களுக்கும், எனது கொழுந்தனாரான 1வது எதிரிக்கும் சொத்து சம்மந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. எனது மாமியார் எவ்வளவு ஓய்வூதிய தொகை பெறுகிறார் என்று எனக்கு தெரியாது. எனது மாமனார் மற்றும் மாமியார் ஓய்வூதிய தொகையை நானும், எனது கணவரும் அனுபவித்து வருகிறோம் என்றும், எதிரிகள் அதை கேட்டதற்கு அவர்கள் என்னை தாக்கியதாக பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள் சொத்து சம்மந்தமாக எனது மாமியாரிடம் கேட்டதற்கு எனது மாமியார் எனக்கு போன் செய்து வரசொல்லி நான் தான் பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில்

போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். நான் பொறியியல் படிப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவதன்று 1 வது எதிரி ஊரில் இல்லை என்றும், லாரியில் பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றும், எனது மாமியார் பேச்சை கேட்டு தன்னிச்சையாக இரவு 11.00 மணிக்கு மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்துக்கள் கையால் நெளிக்கலாம் என்றால் சரியல்ல. மேற்படி பாத்திரங்கள் பழைய இரும்பு கடையில் கிடைக்கும் என்றால் இல்லை. அது என்னுடைய பாத்திரங்கள் தான். மேற்படி பாத்திரங்களை எதிரிகள் உடைக்கவில்லை என்றும், அவை பழைய இரும்பு கடையில் வழக்கிற்காக வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பக்கத்தில் உள்ளவர் எனது அம்மாவுக்கு போன் செய்து சம்பவ இடத்திற்கு வரசொன்னார்கள். நான் மண்பறையில் குடியிருந்து வருகிறேன் என்றும், சம்பவதன்று அம்மாப்பட்டியில் குடியில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எனது மாமியார் ராணுவ சங்கத்தில் உறுப்பினராக இருப்பதால், அதை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF : Judicial Magistrate, Thuraiyur.
Case No. : CC. 145 of 2021
Prosecution Witness : PW2

12.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்லம்மாள் | Calling | : இல்லத்தரசி |
| spouse Name | : பெரியசாமி | Age | : 60 |
| Village | : அம்மாப்பட்டி | | |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அம்மாப்பட்டியில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். அசா.1 எனது மருமகள். எனது மகன் செந்தில்குமார் தற்போது ஆடு மேய்க்கும் வேலை செய்கிறார். டிரைவராகவும் இருந்து வந்தார். ஆஜர் 2 வது எதிரி எனது பெரிய மருமகள். 1 வது எதிரி எனது பெரிய மகன். நான் எனது சின்ன மருமகளுடன் வசித்து வந்தேன். சுமார் 6 வருடத்திற்கு முன்பு 26 ம் தேதி இரவு 11.00 மணியளவில் எதிரிகள் இருவரும் வீட்டிற்கு வந்து என்னை புண்டா மவளே என்று திட்டி என்னை கையால் கன்னத்தில் அடித்தார்கள். அ.சா.1 வந்து சம்பவத்தை தடுத்தார். அவரை எதிரிகள் இருவரும் முடியை பிடித்து இழுத்து டிச்சியில் தள்ளி மிதித்தார்கள். அருகில் இருந்தவர்கள் சம்பவத்தை விலக்கிவிட்டார்கள். 2 வது எதிரி 1 வது எதிரியிடம் நமக்கில்லாத வீடு எதுக்கென்று ஓட்டை உடைக்க சொல்லி 1 வது எதிரி ஓடுகளை உடைத்தார். மத்தியஸ்தர் மூலம் பேசி பொருட்களை பாதுகாத்து கொண்டேன். அ.சா.1 மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ்–ல் சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடக்கும்போது அ.சா.1 அம்மாப்பட்டியில் என்னுடன் குடியிருந்தார். சம்பவம் முடிந்து அ.சா.1 மண்பறையில் குடியிருந்து வருகிறார். எனது கணவர் ராணுவத்தில் பணிபுரிந்தார். நான் படிக்கவில்லை. எனக்கு ஓய்வூதியம் வருகிறது. மேற்படி ராணுவம் சம்மந்தமான விவரங்களை நான் காவல் நிலைத்தில் சொல்லவில்லை. நான் ரூ.15,000/– ஓய்வூதியம் பெறுகிறேன். 3 வீடுகள், 2 ஏக்கர் நிலம் உள்ளது. மேற்படி சொத்துக்களை நானும், அ.சா.1ம் பராமரித்து வருகிறேன் என்றால் இல்லை. சம்பவதன்று எனது 2வது மகன் லாரிக்கு சென்றுவிட்டார் என்றால் இல்லை. நான் தான் அ.சா.1ஐ போன் செய்து மண்பறையில் இருந்து வரசொல்லி பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி என்னையும், அ.சா.1யும் அடிக்கவில்லை என்றும், எதிரிகள் சொத்தை பிரித்து கேட்டதற்கு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. என் பெயரிலும் வழக்கு நடக்கிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தை கேட்டதற்கு ராணுவ உறுப்பினர் பதவியை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்

**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 145 of 2021 |
| Prosecution Witness | : | PW3 |

12.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Calling | : கூலிவேலை |
| Father Name | : பெரியசாமி | Age | : 42 |
| Village | : அம்மாப்பட்டி | | |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

1 வது எதிரி ஆஜரில்லை. 2 வது எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அம்மாப்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். அசா.1 எனது மனைவி. அசா.2 எனது அம்மா. ஆஜர் 2 வது எதிரி எனது அண்ணன் மனைவி. 1 வது எதிரி எனது அண்ணன். என் அம்மாவை கட்டாயப்படுத்தி அவருடைய சொத்து மற்றும் ஓய்வூதிய தொகையை எதிரிகள் கேட்டு கொடுமைப்படுத்தி வந்ததால், எனது அம்மா எங்களுடன் வசித்து வந்தார். 06.02.2020 ம் தேதி இரவு 11.00 மணியளவில் எதிரிகள் வீட்டிற்கு வந்து அசா.2 யிடம் தகாத வார்த்தையால் திட்டி பிரச்சினை செய்ததாகவும், அதை அசா.1 கேட்டதாகவும், பேசிக்கலாம் என்று சொன்னதற்கு அ.சா.1 ஐ தகாத வார்த்தையால் திட்டி அடித்ததாகவும், டிச்சியில் தள்ளி மிதித்ததாகவும், வீட்டை உடைத்ததாகவும் அதிகாலை சுமார் 02.00 மணியளவில் நான் பெங்களூரில் லாரியில் இருந்தபோது எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். சம்பவத்தை கேள்விபட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்த எனது மனைவியை வந்து பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவதன்று நான் ஊரில் இல்லை. நான் பெங்களூரில் இருந்தேன். 4 நாட்கள் கழித்து திருச்சி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எனது மனைவி மருத்துவமனையில் இருந்து வந்தபின்பு அவரை தனியார் மருத்துவமனைக்கு என் மாமியார் அழைத்து சென்றார். சொத்தை பிரித்து கொடுக்குமாறு 1வது எதிரி என்னிடம் கேட்கவில்லை. எனது அம்மாவிடம் தான் கேட்டார். எதிரிகள் சொத்தை பிரித்து தரசொல்லி கேட்டதால், எனது அம்மாவை ராணுவ உறுப்பினர் பதவியை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. எனது அம்மாவின் ஓய்வூதிய தொகையை நாங்கள் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. எதிரிகள் சொந்த வீட்டில் உள்ளார்கள். நாங்கள் வாடகை வீட்டில் சம்பவத்திற்கு பின்பு உள்ளோம். எதிரிகளை நாங்கள் அடித்ததாக எங்கள் மீது வழக்கு நடைபெறகிறது. நான் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால்சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு
செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/−அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்